## 14. தலைப்பு 14 – சட்டமா அதிபர் திணைக்களம்

---

### 14.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 25 ஆந் திகதி சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 14.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 14..3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள்

இவ்வறிக்கையின் (அ) மற்றும் (ஆ) இல் காணப்படுகின்ற பொது அவதானிப்புக்கள் மற்றும் 14.4 இலிருந்து 14.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

மூன்று செலவின விடயங்களுக்காக மிகையான ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 28 சதவீதம் தொடக்கம் 50 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

01401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 2,181,041 கூட்டுமொத்தமாக இருந்தது.

## 14.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 14.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 ஒக்தோபர் மாதம் வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 14.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முறையாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 14.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

2012 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 14.5 செயலாற்றல்

2012 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் திணைக்களம் ஆரம்பித்த கோவைகளின் எண்ணிக்கை மற்றும் வேலை முடிவடைந்த கோவைகளின் எண்ணிக்கை தொடர்பான நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | பிரிவு | ஆரம்பித்த கோவைகளின் எண்ணிக்கை | வேலை முடிவடைந்த கோவைகளின் எண்ணிக்கை | மேலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய கோவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | அபராதம் | 3249 | 1107 | 2142 |
| (ஆ) | சிவில் | 2714 | 158 | 2556 |
| (இ) | நீதிமன்றம் | 765 | 636 | 129 |
| (ஈ) | கூட்டுத்தாபனம் | 2123 | 1606 | 517 |
| (உ) | பொது மக்கள் முறைப்பாடு | 16765 | 12049 | 4716 |

## 14.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 213 | 165 | 48 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 12 | 06 | 06 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 155 | 106 | 49 | - |
| (ஈ) | ஆரம்ப நிலை | 213 | 179 | 34 | - |
| (உ) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | - | 15 | - | 15 |
| | | 593 | 471 | 137 | 15 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 137 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.